**அரநாயக்க பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரநாயக்க பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED 54 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகளின் படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் சகல உள்ளூராட்சி நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த நியமம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்காக மாகாண அரசாங்க சேவை ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 550,000 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டமையால் மிகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண அரசாங்க சேவை ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 92,412 கூட்டுத்தொகை, செலவினம் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் இடமாற்றலாகி வந்த உத்தியோகத்தரின் ரூபா 149,290 தொகையான இடர் கடன் மீதி ஊழியர் கடன் கணக்கிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 8,171,862 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிலையான சொத்தைக் கணிப்பிடும் பொது சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,048,000 கூட்டுத் தொகையான 04 வாகனங்களின் உரித்தைக் கையேற்காமல் சபையின் நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய சட்டரீதியான மற்றும் எனைய கடப்பாடுகள் தொடர்பாக காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்களுக்குரிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்வில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,037,042 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,980,427 ஆனமையால் வேறுபாடு ரூபா 1,096,485 ஆக இருந்தது.

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

2002 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 672,333 கூட்டுத்தொகையான தொங்கல் கணக்குகளின் செலவு மீதியை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத முற்பணக் கணக்குகளின் பெறுமதி ரூபா 2,705,295 ஆக இருந்ததுடன், அதில் 01 வருடகாலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 139,904 ஆகும்.

### 1.3.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,952,345 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் கணக்காய்வின் போது சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.8 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் 17(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவு | (i) சபைக்குரிய 36 காணிக் கூறுகளில் அனுமதியற்ற 17 குடியிருப்பாளர்களால் நீண்டகாலம் முதல் வீடு மற்றும் வியாபார கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு உரிமை கோரிய போதிலும் அச்சொத்துக்களை பாதுகாப்பதற்காக எந்நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) உஸ்ஸாப்பிட்டிய சந்தைத் தொகுதியின் அருகில் சபைக்குரிய 02 வீடுகள் பண அறவீடின்றி கலாசார நிலையத்திற்கும் தனியார் முன்பள்ளியை நடாத்திச் செல்வதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தன.<br><br>(iii) சபைக்குரிய நகர அதிகார எல்லையில் அமைந்துள்ள 34 காணிப் பங்குகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2001 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்த போதிலும் குத்தகைக்கு காணிப் பங்கைப் பெற்ற நபர்கள் அக் காணிகளில் நிரந்தர வீடுகளை நிர்மாணித்து குத்தகைப் பணத்தைச் செலுத்துவதிலிருந்து தவிர்ந்தும் குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதிலிருந்து விலகியும் இருந்த போதிலும் சபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1998/12/10 ஆந் திகதிய 98/3 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | பாவனையில் காணப்படுகின்ற உடன்படிக்கைப் பத்தரத்தின் மாதிரிகளில் குறைபாடுகள் காணப்பட்டமையால் அவற்றைக் குறைக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட வாடகை உடன்படிக்கைப் பத்திரம் 1999 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைப் பின்பற்றாமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மாதாந்த வாடகை கொடுப்பனவு செய்யும் போது தாமதிக்கப்பட்டுகின்ற ஒவ்வொரு மாதத்திற்காகவும் வெவ்வேறாக தண்டப்பணம் கணிப்பிடப்பட்ட காரணத்தால் அறவிடவேண்டிய தாமதக் கட்டணத்தை அறவிடமுடியாதிருந்தது |

| | | |
|---|---|---|
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆம் பிரிவு மற்றும் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சப்ரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | 19 ஏக்கர் 01 றூட் அளவான 03 காணிகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காக கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன் தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீத முற்பணத் தொகை பெறப்படவேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ஏலதாரர்களுடன் உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. விற்பனைக்குரிய காணிகளில் 10 சதவீத நில அளவை சபைக்கு கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் 2012 திசெம்பர் 07 ஆந் திகதிய இலங்கைக் குடியரசின் 1788 ஆம் இலக்க வர்த்தமானி. | 2013 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாத நபர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து அனுமதிப்பத்திரக் கட்டண தண்டப் பணம் அறவிடவேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 14 வியாபார நிலையங்களிலிருந்து அறவிடப்படாதுள்ள அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 13,350 ஆகும். |
| (உ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5.8 ஆம் பிரிவு | ரூபா 25,759,965 பெறுமதியான சொத்துக்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,686,135 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,078,050 ஆனமையால் வருமான அதிகரிப்பு ரூபா 11,764,185 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானம் 179 சதவீதத்தால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவுகள் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,819 | 1,256 | 562 |
| (ii) | வாடகை | 2,142 | 1,781 | 360 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 661 | 723 | (62) |
| (iv) | ஏனைய வருமானம் | 17,580 | 13,608 | 3,972 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 6,071,268 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆபத்தை விளைவிக்கும் மரங்களை அகற்றுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளைப் பரிசீலனை செய்து சபைக்கு அறிக்கையிடுவதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் பரீட்சிப்பு நிறைவேற்றப்படாத 20 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வகையில் நியமிக்கப்பட்ட கொள்வனவுச் சபை மக்கள் பிரதிநிகளை மாத்திரம் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு செயற்பொறுப்பிற்கும் உரிய தொழில்நுட்ப மற்றும் விடய அறிவுள்ள உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

ரூபா 50,000 நிதிஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கந்துன போதிராஜ மாவத்தைக்கு கொங்கிரீட் இடுவதற்குரிய வேலையின் அங்கீகரிக்கப்பட்ட வேலை மதிப்பிட்டின் படி 6 அங்குல தடிப்பத்திலும் 8 அடி அகலத்திலும் 28 அடி நீளத்திற்கும் கொங்கிரீட் போடப்பட வேண்டிய போதிலும் 2 மற்றும் 3 அங்குல தடிப்பத்திலும் 8 அடி அகலத்திலும் 80 அடி நீளத்திலும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட நியமத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக இந்த வீதியில் வாகன ஓட்டத்திற்காக ஈடுபடுத்த முடியாதிருந்தது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு